**தலைப்பு 184 – தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 ஒக்தோபர் 22 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும்

இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த நிதி ஏற்பாடு மற்றும் செலவினம்

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 774.65 மில்லியனாக ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 762.59 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 12.06 மில்லியன் ஆக இருந்ததுடன் அது தேறிய நிதி ஏற்பாட்டில் 1.6 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டு வருபவை | 579.55 | 572.31 | 7.24 | 1.25 |
| மூலதனம் | 195.10 | 190.29 | 4.81 | 2.47 |
| மொத்தம் | 774.65 | 762.60 | 12.05 | 1.56 |

## 2.2 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 18401 | 2.0 | 1.8 | 0.6 | 1.6 | 5.5 | 4.4 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகள் ரூபா 8.88 மில்லியன் ஆகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 184 – தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு

### 3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சினால் 2015 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 23 நாட்கள் மற்றும் 55 நாட்கள் கால தாமதத்தின் பின்னர் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| தலைப்பு/ விடய இலக்கம் | கணக்குகளின் பெயர் | கணக்குகள் கணக்காய்விற்காகக் கிடைத்த திகதி | தாமதக் காலம் |
|---|---|---|---|
| | | | நாட்கள் |
| 184 | ஒதுக்கீட்டுக் கணக்கு | 2015.04.24 | 23 |
| 18401 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று | 2015.05.26 | 55 |

### 3.2 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | இருப்புப் புத்தகம் | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 763 |
| (ஆ) | இழப்புத் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 07 செலவின விடயங்களுக்காக ரூபா 13,712,000 மிகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 10,177,391 தொகை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 3,534,069 ஆக இருந்தது. அதன்படி ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 7 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்குரிய செலவினங்கள் தொடர்பில் 2015 ஆம் ஆண்டின் போது 05 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் மூலம் செலுத்தப்பட்ட ரூபா 166,106 கூட்டுத்தொகை டீஜீஎஸ்ஏ - 8 என்ற படிவத்தில் காணப்படுகின்ற பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப் பிரமாணம் 94(1) இல் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு முரணாக 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 830,376 இனால் அதிகரித்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.4 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

விடய இல. 18401 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது ஒரு வருடத்திற்குக் குறைவான கால நிலுவை மீதிகளின் அறவீடு ரூபா 105,280 கூட்டுத்தொகை கொண்டுவரப்பட்டிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கையின் பிரதி 2015 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அந்த அறிக்கைகள் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

## 3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்ட தாமதம் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| பஸ் நிலையங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய காலம் | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| வலஸ்முல்ல | 40,000,000 | 2014 இரண்டாம் காலாண்டு | 2015 ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நடாத்தப்படாமை |
| லுணுகம்வெஹெர | 15,000,000 | 2014 இரண்டாம் காலாண்டு | |
| அக்குரஸ்ஸ | 30,000,000 | 2014 முதலாம் காலாண்டு | |

## (ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்யப்பட்ட திகதி | 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | | | | ரூபா | |
| (i) போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | | | | | | |
| -பூண்டலோய பஸ் நிலைய நிர்மாணம் | 3,000,000 | 2013 முதலாம் காலாண்டு | 2014/12/31 | பூர்த்திசெய்யப்பட வில்லை | 2,200,000 | நிலம் தொடர்பாக பிரச்சினை காணப்படுகின்றமை |
| (ii) 2015 தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சிக்கு இணையாக தென் மாகாணத்தில் பிரயாணிகள் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | | | | | | |
| - ஹபறாதுவ பஸ் நிலைய நிர்மாணம் | 20,000,000 | 2014 இரண்டாம் காலாண்டு | 2014/12/31 | பூர்த்திசெய்யப்பட வில்லை | 2014/12/31 இல் உள்ளவாறு நிதி முன்னேற்றம் காணப்படவில்லை | நிதி ஏற்பாடு ஒதுக்குதல் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டமை |

### 3.7 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சினால் 2014 திசெம்பர் மாதத்திற்கு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்படுகின்ற வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 6,400 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணம் 395(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 08 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 57 | 28 | 29 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 16 | - | 01 |
| | மொத்தம் | 82 | 52 | 31 | 01 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 31 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ஆட்சேர்க்கப்பட்ட மிகையான ஊழியர்களுக்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.